JL
75926.V.211,N8
N29.2.4
220497

வருடசந்தா ரூ. 2. பதிவு எண் M 2292.

# 'Velala Mitran.'

# வேளாள மித்திரன்.

பிரதி மாதந்தோறும் வெளியுலவும்
ஓர் அரிய தமிழ் இதழ்.

மலர் 2 } சுக்கில-வரு சித்திரை-மீ. 1929-வரு ஏப்ரல்-மீ. { இதழ் 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
JUN 1929
MADRAS

விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| ஸ்ரீ குமாரசாமி பிள்ளை, திருக்கோவிலூர் | ... | [illegible] |
| கோவல் குமாரர் பிரிவு | ... | 41 |
| ஜப்பானில் தீண்டாமை | ... | 44 |
| வாழி நீ அன்னை ! | ... | 45 |
| ஏழைகள் ஊழியன் | ... | 49 |
| ஆரோக்ய தரிசனம் | ... | 53 |
| காந்தியடிகளின் காந்தம் | ... | 59 |
| கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம் | ... | 60 |
| விவசாயப் பழமொழிகள் | ... | 60 |
| நால்வகைத்தோற்றத்தார் நன்மகாநாடு | ... | 25 |


M. A. பாலசுப்ரமண்ய முதலியார்
எடிடர் அண்டு பப்ளிஷர், வேளாள மித்திரன் காரியாலயம்,
கோயமுத்தூர் (தென் இந்தியா.)

கோயமுத்தூர் தேசபந்து அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

# வேளாள மித்திரனைப்பற்றி "தமிழ்நாடு" வின் அபிப்பிராயம்.

உலகில் மக்கள் அபிவிருத்திக்குச் சாதனமா யிலங்குவதில் முதன்மைபெற்றது பத்திரிகாபி விருத்தியே என்பது யாரும் மருக்கக் கூடாததோர் விஷயமாகும். ஒவ்வொரு தேசத்தாரும், சமூகத்தாரும் தம் தம் நாட்டின், சமூகத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு பற்பல நாமங்களுடன் பத்திரிகைகளை தினசரியாகவோ, வாராந்தமாகவோ, மாசிகையாகவோ வெளியிட்டு வருவது கண்கூடு. எனினும் நம் நாட்டில் பத்திரிகைகளே சொற்பம். அதிலும் சிறப்பாக நம் நாட்டில் பத்திரிகையின் தோற்றம் வெகு சொற்பம். தற்பொழுது தான் சிறிது காலமாக தமிழர்கள் விழிப்புற்று ஆங்காங்கே மகாநாடுகள் கூட்டியும், பத்திரிகைகளை நிறுவியும் முன்னேற்றத்திற்கான பாதைகளில் செல்ல முற்பட்டிருப்பது சந்தோஷிக்கத் தக்கதே. நம் தமிழ் நாட்டிலும், மற்றும் கடல்கடந்தும் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையோரைக் கொண்டது வேளாளர் சமூக மெனக் கூறுதல்மிகையாகாது. அத்தகைய சமூகத்திற்குற்ற தொண்டு செய்ய முளைத்த "வேளாள மித்திரன்" ஆதரவுக் குறைவால் வாராந்தமாக விருந்ததிலிருந்து மறைந்து தற்போது மாதாந்தமாக உடற்சுருக்கத்துடன் தைமாதத்திலிருந்து பல அறிஞரது கட்டுரைகளைத் தாங்கி வெளிவரத் தொடங்கியிருக்கிறது. பொதுவாக தேச ஊழியமும், சிறப்பாக சமூக ஊழியமுமே இதன் நோக்கமாகும் கடந்த வருஷத்தில் ஏற்பட்ட பாலாரிஷ்டத்தால் சிறிது காலம் பத்திரிகை வெளிவராமல் நின்றிருந்து, பின்னர் தற்போது மாதாந்தமாக வாவது வெளிவரசெய்து சமூகத் தொண்டாற்ற முற்பட்ட இதன் ஆசிரியர் எம். ஏ. பாலசுப்பிரமணியத்தின் விடாமுயற்சி போற்றற் பாலது. பெதுவாக தமிழ் நாட்டையும் சிறப்பாக குலமக்களுடையவும் ஆதரவை எதிர்பார்க்கும் மித்திரனை ஒவ்வொருவம் போற்றி வளர்த்து, அதன் மூலம் ஆசிரியர் ஊக்கத்தை அதிகரித்து விருத்தி யடையும் படிச் செய்வது தமிழர் கடமை.

## சந்தாதாரர்கள் கவனிக்க.

சந்தாதாரர்கள் நமது புதுவருட சந்தாதொகையை அனுப்பும் போது தமது சந்தா நெம்பரைத் தெரிவித்தால் நலமாயிருக்கும்.

(ப. ர்.)

வேளாள மித்திரன் உழைப்பாளியா இல்லையா ? நீங்கள் வேளாளமித்திரனுக்காக என்ன செய்கின்றீர்கள் ? இவ்வருஷம் ஒரு புதிய சந்தாதாரரையாவது சேர்த்துக்கொடுத்தோம் என்ற திருப்தி உங்களிடம் உண்டாகுக.

உ
சிவமயம்.

# வேளாள மித்திரன்.

உழு துண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 } சுக்கில-ளு சித்திரை-மீ. 1929-ளு ஏப்ரல்-மீ. { இதழ் 4.



## கோவல் குமரனார் பிரிவு.

கல்விச் சமுத்திரம், கமலாலயம், தமிழ் கடல் மடை திறந்த வெள்ளம், சொல் விற் பனம் விளையும் மதுரக்களஞ்சியம், தோன்று கற்பூரதீபம் என விளங்கி, அன்பர் விழையும் சபைகள் தோறுமெய்தி, சொன் மழை பொழிந்து, சமயப் பயிர் வளர்த்து வந்த தனிப் பெருமேகம்—கடந்த 24–4–29 புத னன்று திடீரெனக் கரந்தது. முத்தமிழ் மும்மதம் பொழி இருயானைகளென்ன கயப் பாக்கம் சதாசிவ செட்டியாருடன் நம் பகுதிக்கு அடிக்கடி போந்து, பேரூர் சன்மார்க்க சபையில் சொற்பொழிவாற்றிய மணம்பூண்டி குமாரசாமி பிள்ளையாரை அறியாதார் உண்டோ! சதாசிவத்தை இழந்த துயர் ஆறும் முன், குமரனையும் இழக்க நேர்ந்ததே! உகிர் சுற்றின் மீது விழுவதும் உலக்கையோ! ஐயோ! ஐயோ! திருநீறு மிளிர் நுதலும், திருக்கண்டி யணிமிடறும், கதராடை திகழ் அரையும், கவினுரையுங் கொண்ட மணம்பூண்டி நாவலனை—என்றினிக் காண்போம்! நகைமலர வகைக்கொரு பாட்டேனும் மணிவாசகனைக் கேட்பதெப்போ? எப்போ?

தென் பெண்ணை நதி தவழும் மணம்பூண்டியில், பார்க்கவ குலத்தில், தெய்வீக[illegible]ருள் நாயனார் வழியில்,

தோன்றிய கோவலூர் வழக்கறிஞர் இராமசாமி பிள்ளைக்கு உதித்தவர் நங் குமரசாமியார். இளமையில் ஆங்கிலம் படித்தார். பிறகு தமிழ் கடல் படிந்தார். இராமலிங்க சுவாமிகளின் சிஷ்யரான கந்தசாமி பிள்ளை அவர்கள் உறவால் சிவநெறியில் திருப்பினார். பிறகு திருப்பாதிரிப்புலியூர் சண்முக மெய்ஞானியாரின் பிரதம சீடரானார்.

அன்பர் பணி செய்யவே ஆளாகி வந்த நங்குமரனார் இளவயது கொண்டே மணம்பூண்டி பால பக்தஜன சபை, பிரமஞான சங்கம், பார்க்கவ குல சங்கம் முதலிய அறநிலையங்களை நிறுவி, தன் தொண்டாற்ற முனைந்தார். சைவ சித்தாந்த சமாஜத்திலும் நுழைந்து இவராற்றிய பெரும்பணி என்றும் இறவாதது.

தமிழ் நாட்டிலுள்ள சிறு, பெரு, சங்கங்கள் அனைத்தினையும் தன்னுயிரென ஓம்பி, எளியார்க்கும் எளியாராய், ஆங்காங்கு எய்தி, ஆற்றிய அருந் தொண்டினை நினைந்தே தமிழகம் இன்று கதருகிறது. சபையில் இக்குமரச் சந்திரன் எழ, மக்கள் மனக் கடலும் மகிழ்ச்சி அலை வீசி எழும். இவரது பழுத்த சிவவேடத்தை கன்வழி பருகி இமையோரானவர் பலர். செவிக்குணவாய சொல்லமிழ்தை மாந்தி ஓவியமாவோர் பலர்.பலர். மலை வீழ் அருவியென பெருக்கெடுத்தோடும் இவரது சொல் அழகும், பொருட் பொலியும், தொடையழுக்கும் நடைக் கவினும் கவராத தெவரை? களிப்பூட்டாதது யாரை? எவரோ இனி இச்சொல் விருந்திடுவர்? நகை நீரூட்டும் நாயகன் எங்கே? கோடை யிடி, கடல் மடை, பெரும்புயல், மழை யென வழங்கும் சிறப்புப் பெயரெல்லாம் இவர் நாவன்மையை குறிப்பதல்லையோ?

கடந்த இருபதாண்டுகளின் ஓய்வில்லாத் தொண்டால் உடல்வளம் குன்றலாயிற்று. 40-வது ஆண்டு முதல் நோய் வாய்படலானார். எனினும், தன் கடலில் பின்வாங்கியவரல்லர். 8 ஆண்டு முன்னிலும் தீவிரமாக உழைக்க ஆரம்பித்தார். இதன் பயனாக நோய் மிகுந்தது. உடலில் ஓரிரண்டு கட்டிகள் தோன்றினவாம். அதை கோவலூர் மிஷன் ஆஸ்பத்திரியில் அறுத்து, சுகப்படுத்தும் நாட்களில்,—தன் 48 வயதில், அன்பர் குமாரசாமியார் இன்னுயிர் துறந்தார். நமன் வாய் [illegible] லங்கா சித்தத்துடன் நஞ் சைவப்பெரியார் [illegible]



என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீ புரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ் சுதி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடு மதனாலே."

என்றுந் தேவார மோதி, உயிர் நீத்தாராம். என்ன மன வலிமை? காலனுக்கும் அஞ்சுவரோ கண்ணுதல் அடியார்? அவருடல் அடக்கஞ் செய்யும் நாளில், ஐரோப்ப, இந்திய கிறிஸ்துவர், முஸ்லீம்கள், சைவர், வைணவர் முதலிய அனைவரும் ஒருங்கு திரண்டு செய்த இறுதி பிரிவுபசாரம் ஒன்றே குமரரது சர்வசமய சமரச தொண்டை உணர்த்துவதன்றோ? தாயைப் பிரிந்த குழவிபோல், ஆதிதிராவிட மக்கள், கூடிக்கூடிக் கதறினராம். இவர் அவ்வொடுக்கப்பட்டாருக்கு செய்த உண்மைத் தொண்டினையன்றோ இது உதகரிக்கிறது?

சமயத்திற்கெனவே தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்பித்த பெரியாரின் குடும்பத்தாருக்கும், கல்யாண சுந்தர ராதிய அவர் அன்பர் குழான்களுக்கும், என் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம். கோவலூர் குமரனது ஆன்மா சாந்தி பெறுவதாக சாந்தி! சாந்தி! சாந்தி! அன்பர் காட்டிய சமரச உணர்வு கொண்டுழைத்தலே நாமிப் பெரியாருக்கு செய்யும் உண்மை வணக்கமாகும். குமரரது ஆன்மா சாந்தி பெறுவதாக. சாந்தி! சாந்தி! சாந்தி!

## குறிப்புகள்.

**மதுக்கரை:—**

ஹிந்து சமய உண்மைகளை சிறுவருக்கு எடுத்து ஊட்டி, சமயாபி விருத்தி செய்யும் உத்தம கைங்கர்யத்திற்கு இவ்வூர் 'ஜனானுகூல நிதியார்' ரூ. 100-க்கு குறையாமல் உதவுவதாக வாக்

களித்துள்ளார். ஸ்ரீ மாரப்ப கவுண்டரவர்களை காரியதரிசியாக உடைய இப் 'பாங்கு' உரிமையாளர் அனைவர்க்கும் இவ் உயிர் பெருமை உரியதாகுக. இவர்கள் சமயாபிமானத்தை போற்றுகிறோம்.

## ஜப்பானில் தீண்டாமை.

நம்நாட்டில் தீண்டாமையிருப்பதுபோலவே ஜப்பான் தேசத்திலும் 'ஈட்டர்' என்ற வகுப்பினர் தீண்டாதாராகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் எத்தகைய குற்றமற்றவர்களாயிருப்பினும் ஈட்டர் என்ற ஜாதியில் பிறந்ததற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். நம்நாட்டில் தீண்டாதார் முன்னேற்ற மடைவதற்கு நாம் எவ்விதமான முயற்சிகள் செய்கிறோமோ அஃதேபோல் ஜப்பான் தேசத்திலும் தீவிரமான முயற்சிகள் செய்துவருகிறார்கள். தீண்டாமையை ஒழிப்பதிலும் அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுப்பதிலும் மகாத்மா காந்தி, லஜபதிராய் ஆகியவர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்களோ அஃதேபோல் ரேணி அரிமா என்பவர் அதிக வேலைசெய்து வருகிறார்கள். ஈட்டர் மலையாளத்திலுள்ள தீண்ட தார் எவ்விதமாகக் கஷ்டங்களை அநுபவிக்கிறார்களோ அஃதேபோல் கஷ்டப்படுகிறார்கள். உத்தியோகங்கள் வகிக்கவும், பொதுப்பள்ளிக்கூடங்களில் படிக்கவும், இதர ஜப்பானியர்களுடன் குடியிருக்கவும் அவர்கட்கு முடியாது. ஒருசமயம் ராணுவம் பயிற்சி இருப்பினும் இவர்களுக்கு சேனையில் உயர்ந்தபதவி கொடுப்பதில்லை. சத்திரங்களிலும், போஜனசாலைகளிலும், இவர்கட்கு அன்னமளிப்பதில்லை. நிறத்திலேனும் மற்றைய முறைகளிலேனும் ஜப்பானிலுள்ள ஈட்டர்கள் வித்தியாசமில்லாது ஜப்பானியர்களைப் போலத்தான் உள்ளவர்கள். நம்நாட்டிலுள்ள சிலர் தீண்டாமை உண்டென்றுசொல்லித்திரிவதுபோல் அந்நாட்டிலும் சிலர் இருக்கிறதாகத்தெரிகிறது. நம்நாட்டைப்பேரல் அந்நாட்டிலுள்ளவர்களும் தீண்டாமையை அகற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதால் இன்னும் சிலவருடங்களுக்குள் இந்தியாவிலும், ஜப்பானிலும், தீண்டாமை அரவே யில்லாமல் போய்விடுமென்பது உறுதி.



# வாழி நீ அன்னை!

கடலுடுத்த ஆல்பியனை, ஆங்கிலேயனும்; மலையடர்ந்த காலிபோர்னியாவை, ஸ்காத்துலாந்தியனும்; பச்சைத்தீவை, ஐயர்லாந்தியனும்; புராதன மத்யகால நகரங்கள், சூரியவொளி தவழும் வானம், அழகிய கடல்களை இத்தாலியனும்; வியந்து பெருமை கொள்ளுகின்றனர்.

ஆனால் இந்தியன், தன் தாய் நாட்டைப்பற்றி கூற என்னவிருக்கிறது? புகழ்வதற்கு எதுதானில்லை? என்று, கேள்வி, முறைமாறி யிருப்பதே பொருந்தும்.

ஹிந்துக்கள் வழிபடும் கடவுளின் விஸ்வரூபத்தைப் போல ஹிமோத்கிரி தலைதூக்கி நிற்கிறது; அமெரிக்காவை தவிர்ப்பினும் ஐரோப்பாவினிடம் போட்டியிடும் ஜீவ நதிகள் தவழ்கின்றன. சைபீரிய குளிர்ச்சியுள்ள ஹிமாசல உச்சியிலிருந்து, பூமத்திய ரேகையுள்ள காவிரி டெல்டா வரை, பலதிறப்பட்ட சீதோஷ்ண ஸ்திதி படிப்படியாக அமர்ந்துள்ளது இமயமலை மத்தியிலுள்ள 'டிபோடார்' வனத்திலிருந்து—தேக்கு மரங்கள் கம்பீரமாய் வளரும் மேற்குத் தொடர்ச்சி மலைகளினின்று, கோமண்டலக்கரை வரை, போற்றலை சாய்த்தாறு பசிய நெத்த பயிர் கொண்ட பயிர்வளமுண்டு. நாடுபடு பொருள்களும் காடுபடு திரவியங்களும் கணக்கிறந்தன. உலகில், கிழக்கு மேற்கு நாடுகளும் காட்ட முடியாத இயற்கை வனப்பு இங்கு மிளிர்கிறது. புரிவு, விபாகம், அழகு கம்பீரங்களில் இந்தியாவிற்கு இணையான தேசம் உண்டோ? தவளகிரியில் சூர்யோதயமும், அப்போலொ பந்தரில் அதன் அஸ்தமானமும், பசியமர கோல நிழலில் முத்தொளி பரப்பும் தாஜ் மஹாலும் அவன்மீது தவரும் சந்திர மொளியும், உலகயாத்திரீகன் மனத்தை கொள்ளையிடுவன. தவிர எத்தனை ஜாதியர்? எவ்வளவு பாஷை, எத்தகைய மாறுன பூர்வோத்திரம்? அனைவரும் தேசிய லக்ஷியத்தில் ஒருமனம்பட்டு வருகின்றனரே! ஓரே யிடத்தில் வசிக்கின்றன ரன்றோ? சுருக்கின், இந்தியா ஒரு சிறு உலகம்

என்னலாம். இவைதவிர, உலக சரித்திரத்தில் இந்தியாவை உயர்த்தியதும், நமக்குள் ஆழ்ந்த பக்தியை ஊட்டுவன்வும் பிற உண்டோ? கிரேக்கருக்கு 'ஓடீஸியஸ்' உம் (Iliad) இல்லியட்டும், டியூடன்னருக்கு ஞானியரும், லத்தீனருக்கு பராக்கிரம வீர சரிதைகளும் இருக்குமானால், இந்தியாவின் பலபாஷைகளிலுள்ள தெய்வீக இதிகாசங்களும் அவற்றுடன் போட்டியிட எழுகின்றன. 'மேகோன்னதமான வீரம் சில மிவைகளுக்குத் தாயக ரத்னங்களன்றோ நமது இராமாயண, பாரதங்கள்? போர்தரும் வெற்றியிலும், சமாதானம் விளைக்கும் ஜெயம் குறைந்ததல்ல' என் புது ஆங்கில கவி மில்டனின் வாக்கு. இச்சொற்கள், பிற தேசங்களை விட நமது நாட்டிற்கே உண்மையில் பொருந்துவதாகும். ஏனெனின் காவியம், சங்கீதம், நடினம், சிற்பம், சித்திரம் ஆகிய 5ம் பெருங் கலைகளிலும் நமக்கு விற்பன முண்டு. கணிதம் பூத பௌதீகம், வான நூற்களிற் பயிற்சி யுடையோம்; காய—ரண, சிகிக்ஷை, விவசாயம், கட்டட நிருமாணம், உலோக தொழில்களிலும் சாஸ்திரீய அறிவு நமக்குண்டு. மர, தந்த, உலோக, நெசவு முதலிய மிக நுண்ணிய கைத்தொழில்களிலும் பிறருக்கு பின்வாங்கியவ ரல்லோம். சட்டம், சிக்கனம், ராஜதர்ம மாதிய பிற கலைகளிலும் பிறரை திடுக்கிடச் செய்வோம்! சட்டம், சிக்கனம், ராஜதர்ம மாதிய பிற துறைகளிலும் பிறருக்கு பின்வாங்கியவ ரல்லோம். உலகின் பிற பகுதிகள், எதிர்கால கருவில் உறங்கியபோதே, நந் தாய் நாடு இத்துறைகளிலெல்லாம் தீவிர முன்னேற்றம் பெற்றிருந்தது. ஆனால் நேற்று பிறந்த மேலை நாட்டு நாகரீக இளைஞர்கள், இந்திய வெற்றியை இகழ்ந்து நகையாடுகின்றனர். எனினும் அவர்களிடையுள்ள அறிஞர்கள், இந்திய நாகரீகம், பல ஆயிர வருடங்களாக ஒழுங்கான, சாஸ்திரீய முறையில் நாட்டை பண்படுத்தி வந்துளதென இன்று நினைக்க முனைந்துள்ளார்கள்.

இப்பெரும் வளர்ச்சி, இடையில் தேக்குற்றது. சக்திவாய்ந்த பௌத்த அரசர் காலத்தில் மறுபடியும் கிளைத்தது. பழம்பெரும் ஸ்தாபனங்களெல்லாம் புதுமை உலையில் உருக்கப்பட்டு வார்க்கப்பட்டன. சில நூற்றாண்டுகள் இவ்வளர்ச்சி வளர்வதாயிற்று. மீண்டும் ஆப்கன் அரசர் காலத்தில் உறங்கக்கொண்டது. மொகலாய மன்னருக்கு இவ்வாப்கனியர் இடமுதவியபோது, இவை



மீண்டும் தழைக்க ஆரம்பித்தன. அக்பர், ஜீகாங்கிர், ஷாஜகான் நாட்களில், நாட்டியறுக்கு ஒக்குமுறையில், இவை இரண்டாம் முறை உயிர் கொண்டெழுந்தன. இக்காலத்திற்றான் ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், பிர்பால் முதலியோரை காண்கிறோம். ராமானுஜர், மத்வர் ஆகிய வைணவ ஆசாரியரின் துறைபற்றி எழுந்த துக்காராம், ராமதாஸ், கபீர்தாஸ் ஆகிய சமய தீபங்கள் ஜொலிக்கின்றன. பின் தொடர்ந்து, சீக்கியமத ஸ்தாபகரான குரு நானக், தம் கிரந்த முரசை முழக்குகிறார், இக்காலத்திற்குரிய பிறவிளைவுகளைக்காட்ட, மொகலாய—ஹிந்து கலப்பாய சிற்பம், சித்திரம், சங்கீதம், நடையுடை பாவனைகள் முதலியவற்றோடு, ராதா கோவிந்த வகுப்பாரின் தத்துவங்கொண்ட, (Sufism) ஷபிஸம் என்னும் மொகலாய தத்துவ ஞானமும் சிறப்பாக கிளைத்தது. மீண்டுமொரு முறை, ஆங்கிலேய அரசமைப்பு காலத்தில் இந்திய வளர்ச்சி சோம்புகிறது. ஆரம்ப ஆண்டு அமளிகளையும், பயங்கர சிப்பாய்கலக நாட்களையும் அது கடக்க வேண்டியதாயிற்று. விக்டோரியா அரசியின் அன்பு ததும்பும் இந்திய சாசனத்திற்கு, நாட்டமைப்பு புது முறையில் கோலப்படுகிறது. இம்மூன்றாம் முறை விழிப்பையே 'நவீன இந்தியா' என நாம் அழைக்கிறோம்.

மேலை, கீழ் நாடுகளின் நாகரீக ஐக்கியத்தால் பிறந்த புதுமகவே நவீன இந்தியா என்பது. பகீரதன் மூதாதையரைப் போல இறந்தகால சாம்பரிலிருந்து இந்தியா மூன்றாம் முறை உயிர் பெற்றெழுந்து, உலகின் அரசிகளின் ஒருவளாய் திகழ்ந்து, தன்னிடமுள்ள உயரிய கலை, கல்வி, சாஸ்திரங்களை உலகிற்கு உதவ நிற்கிறாள். ரவீந்திர நாத் தாகூர், சரோஜனி, ஜெகதீச சஸ்திரபோஸ், பி. சி. ராய் முதலியோர் அன்னையின் உள்ளத்தை, பொதுவாக உலகத்திற்கும், சிறப்பாக மேனாடுகளுக்கும், உணர்த்துகின்றனர். கழிந்த சில வாண்டுகள், தயானந்த சரஸ்வதி, ஈஸ்வர சந்திர வித்ய சாகரர், ராஜ ராம் மோகனராய், கிசாப் சந்திரசேனர். சர் சாலர் ஜங், சர் சையத் ஆமெத், ரானடே, பத்ருதீன் தயாப்ஜி முதலியோரையும், தென்னாடு சர். டி. முத்துசாமி அய்யர், சர். டி. மாதவ ராவ் முதலிய பெரியாரையும் நமக்கு உதவியுள்ளது.

சமீபத்தின் நம்மை நீத்தவர்களுள் சுவாமி விவேகானந்தர், கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதி, ஸ்வாமி சிரத்தாநந்தர் முதலியோராவர். இப்பெரியார் தமக்குப்பின் தம் வீரத்தை விதைத்து சென்றுள்ளார்கள். D. A. V. கலாசாலையும் குருகுலமும் ஆரிய சமாஜத்தின் குழந்தைகளாகும். இராமகிருஷ்ண மடம் ஒரே சமயத்தில் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் தன் வேர்களை ஆழப்பாய்ச்சியுள்ளது. போஸரின் விஞ்ஞான கழகம், உலகிலுள்ள பல்கலை கழகங்களினின்றும் மாணவரை ஈர்த்து வான் புகழ படைத்துள்ளது. வெகு சில இயக்கங்களை போல 'பிரம்ம சமாஜம்' பிற்கால வங்காளிகளின் வாழ்வை உருவாக்கி வருகிறது. பூனாவிலுள்ள 'இந்திய ஊழியர் சங்கம்' சுயநல மற்ற சமய, தேச தொண்டர் குழாத்தை செப்பனிட்டு வருகிறது. சர் சையத் அகமத்தினுடைய முஸ்லீம் புணருதாரண கனவு அலிகார் கலாசாலை, கழகமாக பரிணமிக்கிறது.

காசி ஹிந்து சர்வ கலாசாலை, பண்டித மதனமோகன மாளவியா, தர்பங்கா மகாராஜாக்களுடைய புகழ் விரித்து நிற்கிறது. பிறதனி ஸ்தாபனங்களை விட, இதன் அங்கையிலேயே எதிர்கால இந்தியரின் சீரிய வாழ்வு அடங்கியுள்ளதெனக் கூறலாம் இதுதான் நம் இறந்தகாலம்—நிகழ்காலமு மிதுவே ஆனால் இத்தகைய தாய் நாட்டிற்கு நாம் செய்யவேண்டிய உயர் கடனென்ன? சமய, சமூக, பிற நோக்கங்கொண்டு நாம் ஒன்று கூடும் இடமெல்லாம் அன்னையைத்தொழும் ஆலயமாக்க வேண்டும். அங்கு திரள்பவரின் உள்ளத்தில் 'நான் இந்தியன் அனைவரும் என் சோதரர்' என்ற உணர்ச்சி வீறிட்டு நிற்கவேண்டும். பிரிவு உணர்வைத் தோற்றும் எக்காரணத்தையும் ஆழவெட்டிப் புதைக்க வேண்டும்.

முதலியார், நாயுடு, பிள்ளை, அய்யர், அய்யங்கார், ஆசாரியார், பட்டர், பந்துலு, சாஸ்திரி என்னும் பிரிவுணர்த்தும் விகுதிகளெல்லாம் சீக்கிரம் ஒழியட்டும். தீக்ஷிதர் பிராமணன், செட்டி, கவுண்டர் என்று பெயரளவில், பிறப்பளவில் கர்வப்படுவதில் பயனில்லை.

சரிதமுங் காணு பழம்பெரும் காலந் துவங்கி, பாரத தேவியின் உயர்பெரும் புகழுக்கு காரணமான சத்தியம், பொறுமை, வீரம், கற்பு, ஜீவகாருண்யம், இடுக்கணிலும் முகமலர்ச்சி, இன்பதுன்பங்



# ஏழைகள் ஊழியன்.

## அறிஞர் ஆண்ட்ரூஸ்.

ஏழைகட்கு உதவிபுரிவதே தனது முக்கியமான கொள்கை எனக்கொண்டு உழைத்து வரும் அறிஞர் ஆண்ட்ரூஸ் அவர்களைப் பற்றி வேளாளமித்திரன் வாசகர்கள் கேள்விப்பட்டிருக்காதிருக்க முடியாது. ஏனெனில் அறிஞர் ஆண்ட்ரூஸ் ஏழைகளின் கஷ்டங்களை நேரில் தெரிந்துகொள்வதற்காகவே அவர் பல கிராமங்களில் பல ஏழைகளுடன் இருந்து பழகி வந்திருக்கிறார். பிறப்பிலே ஆண்ட்ரூஸ் ஆங்கிலேயராக இருந்தபோதிலும் இரவும் பகலும் இந்திய மக்களுக்காக உழைத்து வருகிறார். இவர் முதன் முதலில் இந்தியாவுக்குப் பாதிரியாக வந்தார். ஆனால் பாதிரி வேலையில் வேலை செய்யாது ஏழைகளுக்கு ஊழியம் செய்வதே சிறந்ததெனக் கொண்டார். இவர் காந்தி அடிகளையும் கவி ரவீந்திரநாத் தாகூரையும் குருவாகக்கொண்டவர். இவர் வருடத்தில் 6 மாதம் காந்தி அடிகளிடத்தும், 6 மாதம் கவி ரவீந்திரரிடத்திலும் காலம் கழிப்பார். இவர் தொழிலாளர்கட்கு சலிப்பில்லாமல் உழைப்பார். ஆடம்பர வாழ்வில் ஆசையற்றவர். ஏழைகளைப்போல் எளிய வாழ்க்கையில் இருக்க இவர் அதிக பிரியப்படுவார். எந்த ஊருக்குப்போனாலும் இவர் ஏழைகள் வீட்டைத்தான் தேடிச் செல்வார். ஏழைகள் வீட்டில் எவ்வளவு கேவலமான அன்னமிருந்தபோதிலும் சந்தோஷமாக உண்பார். இக்காலத்தில் தேச ஊழியம் செய்வதற்கு பலர் தொண்டு செய்து வருகிறார்கள். தொண்டு செய்வதில் பலவகை உண்டு. அவைகளில் முக்கியமானவைகள். 1. பத்திரிகை வெளியிடுதல். 2. மேடைகளில் பிரசங்கங்கள் செய்தல். 3. சிறந்த வியாசங்கள் மூலமாக தேசத்தின் நிலையை ஜனங்கட்கு எடுத்துக்காட்டுதல். ஏழைகளுடனேயே பழகி அவர்களது கஷ்ட நஷ்டங்களை நிவர்த்திக்க முயலுதல். ஆகிய இம்மாதிரி துறைகளிலும் அறிஞர் ஆண்ட்ரூஸ் உழைப்பது மன்றி ஏழைகளுடன் பழகி அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை நிவர்த்திப்பதிலே அதிக காலத்தைச் செலவழிக்கிறார். இவரைப்பற்றி எவ்வளவு வேண்டுமென்றாலும் எழுதலாம். ஆனால் இவ்வியாசத்தில் ஏழை

களுடன் எப்படிப்பழகி வருகிறார் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்லி நிறுத்திக்கொள்கிறேன்.

அறிஞர் ஆண்டுரூஸ் அசாம் மாகாணத்தில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவர்களின் கஷ்டங்களை நேரில் கண்டு அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களை செய்துகொடுக்க சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டு வருகையில் ஒரு நாள் மாலை 5-மணிக்குமேல் ஒரு கிராமத்தில் தங்கவேண்டியதாயிற்று. அக்கிராமத்தில் ஓர் ஏழைக்கூலியாள் விருந்தினராகப் போய்ச்சேர்ந்தார். இவர் தங்கியிருந்த வீடு ஓர் கூரைவீடு. அவ்வீட்டில் தாயும் மகனும் தான் உள்ளவர்கள். தாயாருக்கு 50 வயதிருக்கும். மகனுக்கு 28 வயதிருக்கும். 50 வயதான கிழவி தினம் தினம் தனது ஓய்வு நேரத்தில் நூல் நூற்பது வழக்கம். மகன் ஓய்வு கிடைக்கும் காலங்களில் தறிபோட்டு துணியாக நெய்வான். இவர்கள் இருவருக்கு வேண்டிய துணிகளை கிழவியே நூற்றுவிடுவாள். அறிஞர் ஆண்டுரூஸ் இவர்கள் வீட்டில் அந்த இரவைக்கழித்தார். அவர்கள் வீட்டில் அறுசுவையுடன் கூடிய உணவில்லை. ஆனால் ஏழைகள் வறுமைப் பிணியால் குடிக்கும் கஞ்சியைத்தான் இவரும் சந்தோஷத்துடன் குடித்தார். அன்றிரவில் அறிஞர் ஆண்டுரூசுக்கும் அவ்வீட்டிலுள்ள கிழவிக்கும் சிறிதுநேரம் சம்பாஷணை நடந்தது.

கிழவி.—தங்களை என்வீட்டில் வைத்துக்கொண்டு தங்கட்கு இன்று கஞ்சி கொடுத்ததிற்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

ஆண்டுரூஸ்.—தாங்கள் எனக்கு அன்புடன் இட்ட கஞ்சியோ அமுதத்திலும் மேலானது. எல்லாவற்றிற்கும் அன்பே சிறந்தது.

கி.—தாங்கள் எங்கள் பால் அன்புகொண்டு எங்களுக்கு உழைத்துவருவதினுக்கு தங்களுக்கு ஏதாவது வெகுமானம் கொடுக்கலாமென ஆசையாயிருக்கிறது. தங்களுக்கு வெகுமானம் கொடுக்க என்கையில் பணமில்லை. ஆனால் நான் தங்கட்குக் கொடுக்க நினைத்திருக்கும் வெகுமானத்தைக் கண்டால் தாங்கள் எங்களைக் கேலிசெய்யாமலிருக்க முடியாது. வெகுமானம் இன்னதென்று வாய்விட்டுச் சொல்ல வாய் கூசுகிறது மனம் நடுங்குகிறது. என் செய்வதென்று தோன்றவில்லை.



ஆ.—அம்மையே, சந்தோஷத்துடன் சொல்லுங்கள். தாங்கள் எனக்குக் கொடுக்கும் வெகுமதியை சந்தோஷமாகக் கொடுங்கள். நான் பெற்றுக்கொள்கிறேன்.

கி. என் மகன் உபயோகிக்கும் இரண்டு (ஷர்ட்டுகள்) குடுத்துணிகள் இருக்கின்றன. ஆனால் இரண்டும் கிழிந்தவைகளாக இருக்கின்றன. அதில் ஒன்றைத் தங்கட்குக் கொடுக்கலாமென எண்ணியிருக்கிறேன். இதைத்தவிர என் வீட்டில் தங்கட்கு வெகுமதியளிக்க வேறொன்றுமில்லை. என்செய்யட்டும். கிழிந்த குடுத்துணியைத் தங்கட்குக் கொடுக்கும்படி நேரிட்டதென்பதைப் பற்றியே என்மனம் வருத்தமடைகிறது.

ஆ.—இந்த வெகுமதியைக் காட்டிலும், ஏழைகளாகிய உங்களிடம் நான் அதிகம் எங்ஙனம் எதிர்பார்க்க முடியும். இந்த வெகுமதி கிடைத்ததே எனது புண்ணியமெனக் கருதுகிறேன். தாங்கள் எனக்குக் கொடுக்கும் வெகுமதியை எவ்வளவு சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன் என்பதை என்னால் அளவிட்டுச் சொல்ல முடியவில்லையென்ற வருத்தம் எனக்கதிகமாகிறது. நான் உங்களுக்குச் செய்யும் ஊழியத்திற்கு கடவுள் எனக்கு தக்க வெகுமதியை இன்றுகொடுத்ததிற்கு நான் அளவற்ற சந்தோஷமடைகிறேன்.

கி.—இக்குடித்திணியைப் (ஷர்ட்) பெற்றுக்கொள்ளுங்கள் ஐயா!

ஆ.—உடனே இரண்டு கையையும் ஏந்திப் பேற்றுக்கொண்டார். பிறகு அவர்களது கஷ்டங்களைப்பற்றி வெகுநேரம் பேசிவிட்டு அன்று இரவை அக்குடிசையில் கழித்துவிட்டு மறுநாட் காலையில் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வேறு ஊருக்குப் போய்ச்சேர்ந்தார். அக்குடுத்துணியை தையல்காரனிடம் கொடுத்து கிழிந்தபாகத்தில் தைத்து அக்குடுத்துணியை சிலகாலம் உபயோகித்துவந்தார். சிறிது காலத்திற் கற்புரம் அக்குடுத்துணி பிரயோஜனப்படாமல் போகவே அதைத் தனது முதல் பொக்கிஷமாக பெட்டியில் வைத்து பத்திரப்படுத்தி வைத்துவிட்டார். இவர் இவ்விதம் கிழிந்ததுணியைப் பெட்டியில் [illegible] ஓர் மாணவன் பார்த்து எதற்காக இக்கிழிச்[illegible]

தையாக வைத்திருக்கிறீர் எனக்கேட்டதிற்கு அவர் அக்குடுத்தினியின் பெருமையைப் பற்றி அவனுக்கு எடுத்துரைத்தார். இன்றும் அத்துணியை அவர் ஜாக்கிரதையாய் வைத்திருக்கிறார். இவரது உண்மையான உழைப்பை மெச்சி ஏழையினும் ஏழையெனச் சொல்லிக்கொள்ளும் உலகம் போற்றும் உத்தமோத்மாக விளங்கும் மகாத்மா காந்தி அடிகள் ஆண்ட்ரூஸ் அவர்கட்கு தீனபந்து என்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறார். தீனபந்து ஆண்ட்ரூஸ் ஆங்கிலேயராயிருந்து இந்திய மக்களுக்கு அல்லும் பகலும் தூக்கமும் ஓய்வுமின்றி உழைப்பதைக் கண்ணால் கண்டும் நம்நாட்டு இளைஞர்கள் கேலி பேசுவதிலும், தமாஷ் பேசுவதிலும், பிரறை எளனம் பேசுவதிலும் காலத்தை வீணே கழிக்கிறார்கள். இனியேனும் இளைஞர்கள் ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க ஏழைகளுடன் பழகவேண்டுகிறேன். தீனபந்து ஆண்ட்ரூஸ் அவர்கள் ஏழைகளுக்கு உழைப்பதுபோல் நம்நாட்டு இளைஞர்களும் உழைக்கின் ஏழைகளின் கஷ்டமும் வறுமையும் தீரும். ஆதலால் இளைஞர்களே இனியேனும் நாவலைப்படித்துப் பொழுது போக்காதீர்கள். சீட்டு விளையாடிக்கொண்டு தமாஷில் காலம் கழிக்காதீர்கள். தற்கால நாகரீகமெனப் பெறுமை கொள்ளும் ஆடைகளில் மோகங் கொள்ளாதீர்கள். சாதாரண வாழ்க்கையில் ஏழைகளுடன் பழகுவதைக்காட்டிலும் சிறந்ததொண்டில்லை. இளைஞர்கள் இனியேனும் தீனபந்து ஆண்ட்ரூஸைப் பின்பற்றுவார்களாக ;—

---


உயர்ந்த செடிகள் ! புதிய விதைகள் ! !

3-வருஷ வயதுள்ள ஒட்டு மாங்கன்றுகள் 3-அடி உயரமுள்ளது. செடி 1-க்கு அணு 8 முதல் 12. ரோஸ் குரோட்டன்ஸ் ஒட்டுப்பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி முதலியவைகள், இங்கிலீஷ் காய்கறி புஷ்பவிதைகள் கிடைக்கும் புதிய கேட்லாக்கைப் பார்க்கவும். கோலாக் இனும்.

20 சேம்பில் பாக்கெட் ரூ. **2—0—0**
10 ,, ,, ,, **1—4—0**

ச. கொ. இ. காதர் மீரா சாயபு,
ஹெட் நர்சரி, சேலம்.




# ஆரோக்ய தரிசனம்.

## I.

## வைகறைத் துயிலெழில்.

டாக்டர் D. S. P. ராஜா.

---

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
படலிடைக் கீறி வண்பாளைகள் நாற
வைகரை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரியங் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

என, அன்பர் துதி மலர, மலர்வது வைகறை. 'செவி யறிவுறுத்தலைச் செவி அறிவு என்றார். அது, யாலையாமமும் இடையாமமும் கழிந்து கங்குல் வைகுறுதல்; அது கங்குல் வைகிய அறுதியாதல் நோக்கி வைகறை யெனவுங் கூறுப. இது விடியற்கு முன்னர்த்தாகிய 10 நாழிகை யளவு காலம் என நூல்கள் நுவலும். இதற்கே வைகறை விடியல் புலரி உதயம் என பரியாயங்களை பிங்கலம் வடிங்கும்.'

நிலமகள், கனை இருள் என்னும் கூந்தலை புறத்தொதுக்கி தாமரைக் கண் விழிப்ப, அவள் கருவிழிபோன்ற வரிவண்டுகள் வயலிடை படர, பூம் பொழிற் பறவைகள் தீங்கவி இசைப்ப, இதழ் அவிழ்ந்து மலரினம் மதுவிரிந்தொழுக்க, அதன் மணம் அணவிமாருதம் விரிப்ப, கிடிக்கு என்னும் மதிறுதவில் கட்டிய மணியென வெள்ளி முளைத்து கதிர் விரிக்கும் காலமே வைகறை எனக் கொள்ளல் மிகையாகா. அதாவது அதிகாலை 4-மணி சமயமாகும். இக்காலத்து விழிப்பதா லேற்படும் நலன்களை அறிய ஊக்குகள் என்பவற்றை சிறிது காணுத லவசியம். Stimulant, (ஊக்கிகள்) ;—உடற்கு புதிபதோர் பலமீட்டாது, உறங்கு மதன் சக்தியை கல்வி, மிகுதியாக உழைக்கத் தூண்டும் எப்பொருளும் ஊக்கு எனப்படும். ஜீவ சக்தியை கிளத்தும் இவ் வூக்குகள் இல்லையேல் வாய்க்கையும் பொய்யே. ஆதலின் உயிர் வாடி ஊக்கு

கள் அவசியம் வேண்டற்பாலன. இவை 1. Natural Stimulants இயற்கை ஊக்குகள். 2. Artificial Stimulants செயற்கை ஊக்குகள் என இரு வகைத்தாம். இவற்றுள்

செயற்கை ஊக்கிகள்:—தேக சக்தியை அளவுக்கு மீறி திடுக்கென தூண்டி மிகு விரைவில் அதனை ஓலமிட்டிறக்கச் செய்யும் கொடுமை உடையன. இவற்றுள் காப்பி, டீ, புகையிலை சாராயம், கள் முதலியன அடங்கும். இதன் விரிவை நாமெழுதிய 'நச்சுப்பொகை' என்னுந்தலைப்பின் கீழ் காண்க. ஆனால்

இயற்கை or ஆக்க ஊக்கிகளுக்கு இத்தீக்குணமில்லை. தேக இயலுக்கும் சக்திக்கும் சிறிதும் பழுதுண்டான வாறு தகுந்த முறையிலேயே உற்சாக மளித்து வினையாற்றுமாறு செய்கின்றன. ஊக்கிகளுக்கு பொதுவாக உள்ள எதிரொலி (re-action) இவற்றிற்கு கிடையா. ஆதலின் இவையே கொள்ளற்பாலன. சுருங்க கூறின் இவற்றின் நட்புக்கொண்டு, இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தலே ஆரோக்ய தரிசனம் தருவதாகும். நாகரீக கடலில் மூழ்கி தவிக்கும் மேனாட்டார் இன்று பெறவிரும்பி ஓலமிடுவதும் இவ்வியற்கை வாழ்வையன்றோ?

நன்மையே பயக்கு மிவ் வாக்க ஊக்கிகளுள் குளிர்மென் காற்று, ஞாயிறு ஒளி, நிர்மல ஆகாயம், வியாயமம் (தேக உழைப்பு), ஊக்கம், சந்தோஷம், தூயநினைவு, உரிய உள் இழுக்குக் பரிசுத்தமான காற்று, ஒரு கோப்பை பீரைவிட சிறந்த ஊக்கியாய்; குன்றேறலும், விறகு பிளத்தலும், சாராயத்தைவிட ரக்தவோட்டத்தை மிருக்கும்; உரிய நேயனோடமர்ந்து உரையாடல், களுஞ் சுருட்டினும் நிம்மதி தரும்; அபினைவிட, குளிர்ந்த நாள் நரம்புகளின் உறுதியும்; எவற்றினுக்கும் மேலாக கடவுள் ஒருவன் உண்டென்னும் நம்பிக்கை, கொக்கெய்னை (Cocaine) காட்டிலும் விரைவில் கவலையை செருக்கும்; காப்பியினும், குளிர்ந்த ஜல ஸ்நானம் திண்ணிய நரம்புகளை கொடுக்கும்; புளிப்பும் காரமுங் கலந்த உணவைவிட நல்ல பசி தீபனத்தை குளிர் காற்று உண்டாக்கும். தேக சக்திக்கு ஊறு நேருமாறு அளவு கடந்து இவை ஊக்குவதில்லை. ஆகையால் இவ்வியற்கை ஊக்கிகளின் அருளைப் பெற்றவர், நிர்மலமூளை, உறுதி நரம்புகளை பெறுவர். இவர்க்கு



பலம், உற்சாகந்தர பிறிதோர் மருந்தும் வேண்டியதே இல்லை என வால்டர் மூர் என்னும் மேனாட்டறிஞர் தமது சுகாதார உடற் தத்துவ நூலில் இவ்வாக்க ஊக்கிகளின் சிறப்பை வியந்து வியந்து ஓதுகிறார். இவர் புகழும் குளிர் மென்காற்று முதலிய வெல்லாம் வெப்பமிருந்த நம் நாட்டில் குலவும் போது யாது? வைகறையல்லையோ?

## காலை விழிப்பின் குணம்.

காலையம் பொழுதின் தண்ணிய நிலையாலும், 'தாகம் அனல் இளைப்பை சாந்தி செய்யும்' நறுமென் காற்றாலும், தேகம் ஸ்பரிசிக்கப்பட, சர்மத்தினடியில் வலைபோன்று பரவியுள்ள மெல்லிய நரம்பு துனிகள் (Fibrillae) விழிக்கின்றன. இதனால் காரண நரம்புகள் (Sensory Nerves) உற்சாக மடைய, காரிய நரம்புகள் (Mota Nerves) கடனாற்ற விரைகின்றன. நுரையீரல்கள் விரிகின்றன இருதயம் குவிகிறது. ரக்தவோட்டம் மிகுகிறது. தாதுக்களிடையிலும் (Tissues), நரம்புகளினுமுள்ள லஸீகா (Lymph) என்னும் கலைநீர் மலினம் நீக்கப் பெறுகிறது. புதிய, தூய ரக்த ஈட்டத்தில் வளமடைந்த மூளை நுண்ணிய விஷயங்களையும் எளிதில் அறியும் வன்னம் பெறுகிறது. புத்தி தெளிவடைந்துள்ள உடற் சூடு தணிகிறது. பசி எழுகிறது அதிகாலை எழுபவர்க்கு பகலெல்லாம் உற்சாகமும், இரவில் நல்லுறக்கமும் வருதல் கண்கூடு. குறையினும் மிகினும் நோம் செய்யவல்ல வாதம் (Cellforce) பித்தம் (Metabolic activities), கபம் (Cooling and sustaining principle) என்னும் தேக தத்துவங்கள் தத்தம் நிலையில் அமர்கின்றன. இவை முறை பிறழாதாயின் நோயென்னும் பெயர் தானேது? மேனாட்டார் பெரும்பாடுபட்டு இன்று கண்ட இக் காலை விழிப்பின் குணத்தை, பன்னூறு ஆண்டுகளுக்கு முன்வதிந்த நந்தேசையர் வெகு அழகாக புத்தி யூற்கு பொருந்து தெளிவளிக்கும் சுத்த நரம்பினுற்ற துகளருயும் தால்வழி வாத கபந் தத்தநிலை மன்னும் அதிகாலை விழிப்பின் குணத்தைக் காண என்றார்.

உடற்கு உறன்தரலேயன்றி, இக்காலை துயிலெழல் மனமாசையும் போக்குகிறது. காயினி வழங்கும் இனிய கவினுறுங் காக்ஷியால் கண் குளிர்கின்றது. பொருட்களின்மீது பார்வை படிகிறது. படியுந்தோறும் அவற்றின் அதிசய அமைப்பும் செய

னும் புலர்கிறது. அவை மலருந்தோறும் ஆக்கிய அரும் பெரும் தலைவன்மீது மனம் எழுகிறது. கல்லினுட் தேரைக்கும் கருப்பை அண்டத்து உயிர்க்கும் உணவளித்துக் காக்கும் அப்பன் நினைவால், அன்ன, சொர்ன விசாரங்கள் ஒழிகின்றன. கைம்மாறு கருதா இயற்கையைப் போன்று நாமும் தொண்டாற்ற வேண்டுமெனும் அறநினைவு முகிழ்கிறது. தூய நினைவும் உயர் நோக்கமும் வளம் படுகின்றன. வினையாற்ற உடலும் உற்சாகத்திறனுடன் ஒருப்படு கிறது. ஆகா! எத்தகைய தீங்கற்ற கிளர்ச்சி! என்ன ஊக்கம்! இன்ப ஊற்று பெருக்கெடுக்கும் வைகறை அன்னாய்! நின்னுடன் குலவுவோர்க்கு பிணி ஏது? கவலை எங்கே? காலன் தானுண்டோ? ஆரோக்ய மன்றி ஆத்ம தரிசனமுந்தரும் காலையம் பொழுதே! வாழி நீ என்னும்.

கதிரவன் மேல் எழ, எழ, இச்செவ்விய குணங்கள் கரைகின்றன. அதன் வெப்பக் கதிர்களால் பூமியினின்று ஓர் வகை ஆவி கிளம்புகிறது. இது உடலிற் தாக்குற சோம்பல் மிகுகிறது. வலிமை நீக்கப்பெறுமையால் நரம்புகள் சீர்கெட, வாயு ரோகங்கள் விளைக்கின்றன. இவற்றை யெல்லாம் உணர்ந்தே கருங்குளிரான நீரெல்லாம் பளிக்கட்டிகளாக உறையும் மேனாட்டாரே (Early to rise) காலையில் எழு என்பதை பழமொழியாக வழங்குவாரெனின்; நிலங்கொதிக்க கல்லுருகும் வெப்பமுடைய நம் நாட்டில் கூறுவ தென்னை? ஆரோக்யமே யன்றி புத்தி கூர்மையை விரும்புபவரும் "அதனை வளம்படுத்த முயலும் மாணவரும் அவசியம் அதிகாலை எழவேண்டும்; இன்றேல் தண்டனையாக அந்நாள் முழுவதும் உபவாச மிருக்கவேண்டு" மென்ற பொருள் தரும்.

"ஓராழி வெய்யோன் உதயர் துவருற்றகாறும் யேரா துயிலுற்று உணராத பிரமசாரி ஆராமல் ஆற்றை தினம் நோற்றல் அமைத்ததாகும்."

என்ற கடுமையான விதியொன்றே, காலை விழிப்பின் ஏற்றத்தையும் அவசியத்தையும் உணர்த்த சாலாதோ? இவ்வரிய நிர்மல நிர்சப்ப காலைப் பொழுதை புறக்கணித்து, வெப்பமும் அரவமும் பொதுளிய நண்பகலில் திறக்கும் நவீன கல்விச் சாலைகளின் சாஸ்திரீய மென்னையோ? மனிதரைப் பித்தராக்கும் ஏப்ரல் மாதத்தி



லேயே அரசாங்க பரீக்ஷைகளும் நடைபெறுகின்றன. பின் சூம்பியதோள்களும் வீங்கிய மூளையும் பெற்ற மாணவருக்கு குறையென்ன? நெடுநேரம் தூங்கும் சிறுவரின் தீயொழுக்கத்திற்கும் காரணம் தற்கால கல்வி முறையல்லவோ? ஆசிரியர் இவற்றை கருதுவாராக. சில பகல் இந்தியாவிற் றங்கும் ஆங்கிலருக் கெனவே எழுதப்பட்ட நூலிலும் (Early rising is a rule in India to avoid the discomforts of heat and hot whether) வெப்பத்தாலுறும் தீமையை விலக்க அதிகாலை எழல் இந்தியாவில் கொள்ளவேண்டிய நியதி என பம்பாய் சர்ஜன் ஜெனரலாயிருந்த சர் வில்லியம் முரே குறித்துள்ளதை யெண்க. மேலும் நினைக்கவு மரிய பெருங்காரியங்களை யெல்லாம் மிகஎளிதில் முடிக்குந் திறமை வாய்ந்த ரஞ்சித் சிங், சிவாஜி, நெப்போலியன் ஆகிய வீரரும், பிற செயற்கரிய செய்த பெரியாரனைவரும் அதிகாலை யெழும் வழக்க முடையராயிருந்தனர் என சரிதம் விரிக்கிறது. விஞ்ஞான உலக மன்னரான ஜெதீசவாஸு, பி. சி. ராய், தாகூர் சரோஜனிகவிஞர், அறத்தின் மைந்தனை காந்தியடிகள் முதலிய இன்றை நாட் பெரியாரும் இப்பழக்கம் கொண்டுள்ளது கண்கூடு. கதிரவன் மறையா காசினியுடைய நஞ் ஜார்ஜு மன்னரும் இவ்வுயர் வழக்க முடையாரென அண்மைச் செய்திகள் வெளியிடுகின்றன. இப் பெரியாரனைவராலும் கொள்ளப்பட்ட ஒன்றினுக்கு வேறு அத்தாக்ஷி யேன்?

இவ்வுதய விழிப்பின் உயர்வை யோர்ந்தே.

1. 'பிராம்மி முஹூர்த்தே உத்க்ஷிஸ் டேத் ஸ்வஸ்தோ ஆயுஸ் ரக்ஷார்த்தம்.' (ஆரோக்ய, ஆயுளைப்பெற அதிகாலை எழு) சுஸ்ருதம் அ. 24 சு. 3.
2. 'பிராஹ்மே முஹூர்த்தே உத்யேத்' மனுதர்மம் IV, 92.
3. 'வைகறையில் துயில் நீங்கி' காசி காண்டம்.
4. 'வைகறையாமள் துயிலெழுந்து'—ஆசாரக் கோவை.
5. 'வைகறைத் துயில் எழு'

என, நம் நூல்கள் பல ஒருங்கே முழக்குகின்றன. ஆனால் நவநாகரீக செவிடருக்கு அது கேட்பதில்லை. என்செய்வது? இனியேனும் இக்காலை விழிப்பின் சாஸ்திரீய உண்மைகளை யுணர்ந்து ஆசிரியர் நடக்க, மாணவர் கற்பரோ. முறை மாறினும், நாம் விரும்புவது இக்காலை விழிப்பே. ஷே இந்தியருக்கு வேண்டியதும் இக்காலை விழிப்பே யன்றோ?

(48-ம் பக்கம் தொடர்ச்சி)

களில் சமநோக்கு, பன்மைகொண்ட ஜீவாத்துமாக்க ளெல்லாம் இறுதியில் ஒன்றும் பரமாத்மனிடம் பக்தி முதலிய பொற்குணங் களை வேண்டற்பாலன—வளர்க்கடி தருந்தன.

சந்திரகுப்த காலத்தை வருணித்ததைப்போல 'ஆண்கள் வீரர்'; மாதர் கற்பு ஓவியங்கள், உண்மையும் ஞானமும் மக்கள் மூச்சு, களவென்பது சொல்லே; நிறைவும் அமைதியும் நேசபாமும் இந்தியாவில் தாண்டவ மாடுகிறது என எதிர்கால மெகஸ்தனிஸ் நம் நாட்டை குறிக்கட்டும்.

நன்றி மறவாமை, தீமை நினையாமை, பிறர் குற்றம் பொறுத்தல். குறுகிய, அற்ப, புற காரணங்களால் வெகுளாமை, உதவி புரியவும் பெறவுந் தூண்டும், விரிவுள்ளம் முதலிய நற்குணங்களின்றி தேசபக்தி, தியாகம், என்று கத்துவதில் பயனில்லை. எதிர்ப்பு அதிகமென்றும் வாய்ப்பு சில வென்றும் போலி சமாதானங் கூறி கடமையில் பின் தாங்குதல் எளியதே. ஆனால் வீரன், இப் பேடியுரைகளைக் கூறான். தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி மெய்வருந்த கூலி தருமன்றோ?

விழிப்பின் அறிகுறிகள் யாண்டும் புலப்படுகுன்றன. ஜெர்மனிய யுத்த ரங்கங்களிலும் தன் வீரத்தை காட்டி, பிரிடீஸ் ஏகாதிபத்தியத்தில் சம உரிமை வகிக்க தனக்கும் ஆற்றலும் திறனும் உண்டென நம்மன்னை நிரூபித்திருக்கிறாள். எதிர்கால நல் வாழ்விற்குரிய குறிகள் பொலிகின்றன. பொறுப்பு வாய்ந்த ராஜதந்திரிகளெல்லாம் தம் ஆசிகளை சொரிகின்றனர். ஆங்கில கிரீடம் அணிபெற திகழ்க. அதன் நடுப் பெரும் மணியாய் இந்தியா நின்று ஒளிர்க. பாரதப் புதல்வீர்! அனைவரும் ஈண்டுக தாயின் புகழ்பாடுதும்.

ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ ஸீதளாம்
ஸஸ்ய ஸ்யாமளாம் மாதரம் வந்தே மாதரம்!
ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புளகித யாமினீம்
புல்ல குஸுமித த்ரும தள சோபிணீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம்—வரதாம்—மாதரம் வந்தே மாதரம்.

இது 'ஸ்காலரி'ன் கட்டுரை யொன்றை தழுவியது.
அதன் உரிமையாளருக்கு எம் வந்தனம்.

மேட்டுப்பாளையம். கோவை சி. சி. கோவிந்தசாமி நாயுடு,
வித்யானந்த சபையின் உருப்பினர்.



## காந்தியடிகளின் காந்தம்.

மத்திய மாகாணத்தில் ஜாஷ்புரம் என்ற ஓர் சிறிய சமஸ்தானம் ஒன்றுளது. அச்சமஸ்தானத்தில் மிகவும் புராதனமான மலைநாட்டு மக்கள் ஒரு பக்கத்தில் வசித்து வருகிறார்கள் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு சாப குடும்பம் எனப்படும். அவர்கள் வாசம் செய்யும் ஸ்தலத்திற்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் சுமார் நூறு மைல் இருக்கும், அவ்வூரில் தினபந்து ஆண்டுரூஸ் சில மாதங்கள் தங்கி அவ்விடத்திலுள்ள மக்களுக்கு காந்தியடிகளின் நற்போதனையைப் பற்றி அடிக்கடி பிரசங்கித்து வருவார் ஆனால் அவர்கள் காந்தி அடிகளைக் காணாவிட்டாலும் அவர் கொள்கைகளை கேட்டிருக்கிறார்கள். அம்மலைநாட்டு மக்கள் குடியிருக்கும் இடம் காடு மிகுந்த இடமாதலால் அவ்விடத்தில் துஷ்ட மிருகங்கள் அதிகம் வாசம் செய்யும், மற்றும் அவர்கள் சிறு தெய்வங்களாகிய பூதம் காட்டேரி போன்ற தெய்வங்களை வணங்கி வருகிறார்கள். அங்கு வசிக்கும் ஒரு மனிதனுக்காவது எழுத்து வாசனை தெரியாது, ஆனால் அவர்கள் தங்கட்கு மேலதிகாரி காந்தி அடிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். முக்கியமாக கீழ்க்காணும் கொள்கைகளை காந்தியடிகளின் உண்மைக்கொள்கைகளென்று அவர்கள் எண்ணுவதுடன் செய்கையிலும் நடத்திக்காண்பிக்கிறார்கள்.

1. பரிசுத்தமான வாழ்க்கை.
2. பொய் பேசாதிருந்தல்.
3. மதுவோ அல்லது லாகிரி வஸ்துக்களையோ உபயோகிக்காதிருத்தல்.
4. கதராடையை அணிதல்.
5. மாமிச போஜனம் செய்யாதிருத்தல்.

ஆகிய கொள்கைகளை அவர்கள் கைக்கொண்டு ஒழுகுவது மன்னியில் தங்களைச் சான்ற மலைநாட்டு வாசிகள் யாவரையும் தங்களைப்போலாக்கப்பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். சதா காலமும் மதுமாமிசத்தில் மூழ்கியவர்கள் திடீரென காந்தி அடிகளின் போதத்தைக்கேட்டு துர்குணங்களை நிறுத்தினது மிகவும் ஆச்சர்யமே. என்னே! காந்தி மகான் போதத்தின் காந்தம்.

## கோயமுத்தூர் ஜில்லா
## குடியானவர்கள் சங்கம்.

### அறிக்கை.

கோயமுத்தூர் ஜில்லா குடித்தனக்காரர்களின் நன்மையை விரும்பி கோயமுத்தூரில் 1927-௵ ஜூன்-மீ 15-தேதி முதல் "கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம்" ஒன்று நடந்து வருகிறது. இதன் நோக்கத்தை அறிய விரும்புவோர் நாளது-மீ 25, 26, 27 தேதிகளில் திருப்பூர் தேரின்போது நடைபெறும் கால்நடைகள் காக்ஷி சபையின் ஆபீசுக்கு வந்து தெரிந்து கொள்ளலாம். அந்த சமயம் ஷை சங்கத்தின் மகாசபைக்கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

வெள்ளக்கிணர் போஸ்டு,
கோயமுத்தூர்,
1—5—1929.

V. C. வெள்ளிங்கிரி கவுண்டர்,
கௌரவ காரியதரிசி

## விவசாயப் பழமொழிகள்.

ஆடு ஊடாக்காடு விளையாது
ஆட்டுரம் ஓராண்டு நிற்கும் மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்
ஒரு விதமண் வேறுவித மண்ணுக்கு எருவாகும்
உரம் ஏற்றி உழவு செய்
உரம் உதவுவது ஊரார் செய்யார்
எருச் செய்வது இனம் செய்யாது
எருக்குழியின்றி ஏற்பிடியாதே
எருவில்லாவயல் கன்றில்லா மாட்டைப்போல்
குப்பை உயர்ந்தால் குடி உயரும்
குப்பையில்லா வெள்ளாமை பச்சை
வேப்பம் பிண்ணாக்கு விலையுள்ள எருவாகும்
புற்று மண்ணைப் போட்டால் பூமிபலனைத்தரும்
போதுமான எருவிருக்கில் பைத்தியகாரனும் பண்ணையாளனவான்
ஆட்டெரு அந்த வருடம் மாட்டெரு மரு வருஷம்
ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.



## நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு.

(முன் தொடர்ச்சி.)

### வானப்பிரஸ்தாச்சிரமிகளைப்பற்றி வகுக்கின்றேன்.

இல்லறத்தை விதிப்படி நடப்பித்து ஐம்பது வயதிற்குமேல் உத்திராயண காலத்தில் தன் நாயகியைப் புத்திரர் வசம் ஒப்பித்தாவது உடன் இட்டுக்கொண்டாவது கானகம் புகுந்து காய்கனி கிழங்கு முதலிய கந்தமூலங்களை அருந்தி அதிதி பூசை செய்து அழற்கருமம் பஞ்ச எக்யங்கள் செய்து மயிரையும் நகத்தையும் சேதிக்காது மூன்று காலம் நீரினில் மூழ்கி எட்டுக்கவளம் ஏற்று அருந்தி நகரத்துள்ள வஸ்துக்களில் வெறுப்புற்று இறைவன் திருவடி விருப்புற்று, இரவினில் உணவு இல்லாததாகிப் பார்வதி மணாளனைத் தியானம் செய்திருத்தல் வேண்டும்.

அப்படியிருக்கப்பட்டவர்கள் மாதரைப்புல்லி மகவினைப் பயந்தால் ஒழுக்கம் அவரைவிட்டு நீங்கி நரகத்தையடைவதும் தவிர அவருக்கு ஏற்படும் புத்திரர்கள் ஓதுவதற்கும் உரியாரல்லாராகி அவர்கள் மரபு குற்றமடையும், அல்லாமலும் வனத்தில் சஞ்சரித்து பெரியபாறையிற் கண்ணுறங்கி பதினைந்து நாளைக்கு ஒரு தடவை சிறிது ஆகாரம் தேடவும். அதையும் பசித்தவர் வரில் அளிக்காது உதவி காடுமலைகளிலிருக்கும் வனநெல்லை தன்பல்லே உரலாக்கருதி ஒரு நாள் இடைவிட்டேனும் ஆறுநாளைக் கொருமுறையேனும் ஆகாரம் அருந்துதல் வேண்டும். பதன் செய்யாத புலித்தோலைப் புனைந்தும், அதுவே போர்வையாகப் போர்த்தியும், உமாபதியை சதாநினைந்தும், பஞ்சாக்ஷரம் செபித்தும், உபநிடதத்தின் உட்பொருள் தெரிந்து உலகின்கணுள்ள நலம் பெறுதற்கு நன்மார்க்கத்தையும் ஜீவஹிம்சையும் பாவபுண்ணியத்தையும் போதித்து கிருதார்த்தர்களாகி நல்வழியிற் செலுத்தவேண்டியது. வானப்பிரஸ்தாச்சிரமிகளின் கடமையாகவிருக்கும், ஏனோ ஜீவஹிம்சை செய்வார்களைப்பார்த்துச் சும்மா இருந்துவிடுகிறார்கள். சிலர் தாங்களுங்கூட ஜீவவதை செய்யத் தலைப்பட்டும் செய்தும் வருகிறார்கள். ஆகையால் அவர்களிடமும் சுதந்திரம் பெற்றுக்கொண்டு தோடு பதைக்கப்பதைக்க வதைத்தலைச் செய்யும் பாவிகளுக்கு நற்புத்தி போதிக்குமாறும் வேண்டிக்கொண்டு.

## சன்யாசிகள் நிலைமை சற்றுறுய்வாம்.

சன்யாசிகள் தக்க பருவம் வந்தவுடன் ஒரு இடத்தில் தங்காது புழுப்போல் உழன்று திரிந்து காயமும் தானும் வேறெனவுணர்ந்து புலன்வழி மனத்தைச் செலுத்தாது தன்னையுளைக்கழித்தல் வேண்டும்.

அதில் மூன்றுவிதச் சன்னியாசிகள் உண்டு:—ஞானசன்னியாசி, வேத சன்னியாசி, கரும சன்னியாசி என்பனவாம்.

1. ஞானசன்னியாசி = பஞ்சேந்திரியங்களினின்றும் விடுபட்டுத் தானே சிவமாக ஒழுகுபவன்.

2. வேத சன்னியாசி = இந்திரியங்களிடத்தில் நல்ல பயனையடையாது யோகம் செய்துகொண்டிருப்பவன்.

3. கரும சன்னியாசி = உள்ளத்தக்கினியை ஆன்மாவிலடக்கி மனதினால் யாகம் செய்து சிவனைச் சதா நினைத்திருப்பவன்.

இவர்கள் வழிகளிலே சென்றால் அனேக ஜீவன்கள் காலில் மிதிபட்டு இறந்துவிடும் என்று ஜீவகாருண்யம் மேற்கொண்டு மாரிக்காலமாகிய நாலு மாதத்திற்கும் ஓரேயிடத்தில் தங்கியிருந்து பிச்சை செய்து விதித்தனதொடுத்து விலக்கியனவிடுத்து காவியுடுத்து கழுத்துவரை சவரம் செய்துகொண்டு சிவச்சரிதமன்றி அவச்சரிதமாகிய பசுநூல்களை மனதில் மதியாது வெற்றுரைகள் விளம்பாது. தண்டுகமண்டலம் தாங்கி எக்காலத்தும் சிவனை நினைந்துகொண்டிருக்கவேண்டியவர்களல்லவா. இதனாலல்லவா கொல்லாமையாகிய பேரறம். பொய்யாமொழியார் துறவறவியலில் துய்மையாய் மொழிந்தார். இப்படியிருக்க இப்போது அனேக போலிச் சன்னியாசிகள் மலிந்து உண்மை எது எனக் காணக்கூடாது செய்விப்பதும் தவிர தாங்கள் பொய் வேடத்தின் உரவினராகிய நான்குபேர்களையும் துணைக்கூட்டி பஞ்சமாபாதங்களை நெஞ்சினிலஞ்சாது செய்துவருகிறார்கள். இவர்களிடமும் நாம் சுதந்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியது. அத்தியாவஸ்யம் என்று கூறிக்கொண்டு என் சிற்றுரையை இத்துடன் முடித்துக்



கொள்ளுகிறேன். இதிற் கண்ட குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொண்டு வந்தனம் செய்து என்றனிடத்தமர்கின்றேன்.

இப்படிக்கு,
**கோழியார்,**

நானும் அதை அவ்வண்ணமே ஆமோதிக்கிறேன்.

**காடையார்.**

சபையோர்களால் ஏகமனதாய் அங்கீகாரம் செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

---

## தலைவர் முடிப்புரை.

---

**பெருமான்களே பெருமாட்டிகளே!**

இதற்குமுன் பிரேரேபித்தும் ஆமோதித்ததுமாகிய ஒற்றுமை சுதந்திரம் என்ற விஷயங்களைப்பற்றி கபிலைப்பசுவாரும், செம்மறியாரும், வெள்ளாட்டாரும், கோழியாரும் முறையே பிர்மச்சத்திரிய வைசிய சூத்திர வருணத்தார்களிடமும், பிர்மச்சாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன், சன்யாசி என்ற ஆச்சிரமத்தார்களிடமும் சுந்திரம் பெறவேண்டியது அவசியமென்றும் சாங்கோபசாங்கமாக மொழிந்தார்கள். அதைவிட அதிகம் என்ன சொல்லப்போகிறேன், ஆனால் முடிப்புறை சொல்லல் என்ற முறைபற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொண்டு இச்சபையை இனிது முடிக்கிறேன்.

**இச்சங்கத்தைச் சார்ந்த பங்கமில்லாத் தங்கங்களே!**

**'ஒற்றுமை'**

நம்மவர்களில் ஒற்றுமை என்பது முற்றிலுமிருக்கவேண்டியதே உலகின்கண் ஒற்றுமையோடு கூடி வாழ்ந்தார்களானால் அவர்களுக்கு யாராலும் எவ்விதமான துன்பங்களும் ஒருக்காலும் சம்பவியாது. அதனால்தான் 'சேர்ந்து வாழ்ந்தார் சிறப்புற்றார். பிரிந்து வாழ்ந்தார் பட்டார்.' என்றும் சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையென்றும் ஒற்றுமையே ஜீவிய ஊற்று என்றும் பழமொழிகள் கூறுகின்றனவே. உதாரணமாக, சந்தோப சுந்தர்கள் தங்களுக்குள்

ஒற்றுமை யுள்ளதாலல்லவா செயற்கரிய காரியங்களையும் செய்தார்கள் தங்களுக்குள் விகற்பம் வந்தழி இருவரும் போர்புரிந்து மாண்டொழிந்தார்கள்.

இன்பத்துளின்பம் பயக்குமிகலென்னுந்
துன்பத்துட்டுன்பங்கெடின். என்றார் வள்ளுவர்.

ஆகையால் நாம் ஒற்றுமையாய் இருந்து பெறற்கரியபேறு பெறுவோமாகுக.

## சுதந்திரம்.

பெரியோர்களே! நான்கு வருணத்தார்களைப்பற்றி பகவத்கீதையில் 9-வது 23-வது சுலோகங்கூறுகிறதாவது :—

1. இந்திரியங்களையும் மனத்தையும் ஜெயித்தும் சுவாதீனம் செய்தும் பரமசாந்தியடைந்தவர்களே பிராமணர்களென்றும்.

2. இந்திரியங்களாலும் அவற்றிற்காசனாகிய மனத்தாலும் புண்ணிய பாவங்கள் உண்டாகிறதென்றெண்ணி அத்தோடு யுத்தம் செய்கிறவர்களே சத்திரியர்களென்றும்?

3. புண்ணிய பாவங்களைத் தெரிந்து புண்ணியத்தால் லாபமும் பாவத்தால் நஷ்டமும் உண்டு எனத் தெரிந்துகொள்ளும் நிலையை உடையவர்கள் வைசியர்கள் என்றும்;

4. யாதொன்றும் அறியாத அஞ்ஞானத்துடன் இருப்பவர்கள் சூத்திரர்கள் என்றும் கூறுகின்றது. அஃது நிற்க.

நான்கு வருணத்தார்களிடமும், நான்கு ஆச்சிரமிகளிடமும், சுதந்திரம் பெறவேண்டியது அவசியந்தான். உலகத்தில் எந்த உயிர்களும் உருளுரு சகடவாழ்க்கையின் இயற்கையுடையது. எந்த உயிரும் மரணத்திற்குப் பயந்து நடுங்கும் சுபாவமுடையது. எல்லா உயிர்களுக்கும் மரணவேதனையைவிட வேறு துன்பங்கிடையாது. ஆகையால் எந்தச் ஜீவன்களுக்கும் இன்பஞ் செய்தலே புண்ணியமென்றும், துன்பஞ் செய்தலே பாவமென்றும் பெரியார் கூறியிருக்கச் சில ஆறறிவுடைய மானிடவர்க்கத்தார்கள் நம்மையும், நாம்படும் மரணவேதனையையும் சிறிதும் கவனியாது நம்மவர்களைத் துடி துடிக்கக் கொல்லுகிறார்களே. கொல்பவரைக் பார்த்துந் தடுக்காதிருக்கின்றார்களே இதைக் குறித்தன்றோ;



உண்ண வூனை விரும்பி உயிர் கொலை
யெண்ணுவான் கொலை கண்டிரங்கான் கொலை
பண்ணுவாரைத்தடுத்துப் பகர்கில்லா
னெண்ணுவானிவரோடெனுநால்வரும் என்றும்

கொல்லாவிரத குலமே குலமென்னு
நல்லார்களெல்லா நவின்றிருக்க—கொல்லாற்
தெரிசித்தாலும் பாவம்றீயன்முக நோக்கிப்
பரிசித்தாலும் பாவம்பார், என்னும்

அம்மாவெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
யிம்மானிடரெல்லா மின்புற்றிருக்கின்றா
ரம்மாவெனுஞ் சத்தங்கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமென்றால் புசித்தவர்க்கென்சொல்லுவதே என்றும்

பெரியார் கூறியிருக்கின்றார்களே. நிற்க, பக்ஷி மிருகங்களை நம்மாகாரத்திற்காகவே கடவுள் படைத்தார் எனச் சிலர் சொல்லும் சொல்லை ஓர்வாம். விதி, விலக்கு, மோக்கம், நரகம், புண்ணியம், பாவம், நல்வினை, தீவினை, சுகம், துக்கம், என்பனவற்றைத்தெரியும் ஆறறிவுடைய மானிட சரீரம் மேலானதே, மானிடர்களைப்போலவே மரண துன்பத்திற்குப் பயப்படும் இயற்கை எந்தச் ஜீவன்களிடத்திலும் உண்டு ஆகையால், அக்கொலையும் பாபமே. மானிடர்களின் உணவின் பொருட்டாகவே நம்மைக் கடவுள் படைத்திருப்பாரானால் யாதொரு உபயோகமுமில்லாத அதிகச் சிறிய கொசு எறும்பு புழு முதலியவற்றையும், பெரிய பிராணிகளாகிய புலி கரடி வேங்கை சிம்மம் முதலிய பிராணிகளை எதன்பொருட்டுப் படைத்தார். அவர் செய்கை பயனிலவே, கடவுள் ஞானமயமானவர் என்பது பொருந்தாதே ஆகையால் எந்தச் ஜீவன்களைக் கொன்று தின்றாலும் பாபம் என்பது தோன்றவில்லையா, சாதாரணமான நாய், கழுதை, குதிரை முதலிய ஜீவன்களையும் கடவுள் படைக்கவில்லையா அவைகளையும் ஆகாரத்திற்கானால் தின்னலாகுமே. இதனாலன்றோ

எவ்வுயிரும் பராபரன்றன் சன்னிதியதாகு
மிலங்கு முயிருடலனைத்துமீசன் கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போலென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்துமியல்பினோரை
வெவ்விய மதூதருந் தண்டஞ்செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில்வார்த்து
வெவ்விய தீயெழுநரகில் வீழ்த்திடாறு
வேதனை செய்திடுவரென விளம்பு நூலே.

என்றுகூறி, கொலை மகாபாதகம் என்றல்லவா கொலையைப் பஞ்சமா பாதகங்களில் முதன்மையாய் வைக்கப்பட்டது. கொலை செய்யாதவன் கொடுக்கும்படியான அன்னம் தேவாமிர்தமாகுமென்றும், செய்கிறவன் கொடுக்கும் அன்னம் விஷம் ஆகும் என்றும், புலையன் வீட்டிற் புசித்தவன் எப்படிப் புலையனாகின்றானோ அதுபோல் கொலை செய்தவன் வீட்டிற் புசித்தவன் கொலைஞனாகின்றான். ஆகையால் இவர்களுக்கு மேலான முக்திகிடையாது நரகவாதனை கிடைக்கும் என்றும் கூறுகின்றனவே,

ஆடு பன்றி கோழி அருந்துவோர்கட்கெல்லாம்
வீடில்லை என்றுரைக்கும் வேதங்க—ளுடுமவர்க்
கிம்மையினுந் துன்ப மறுமையினுமேழ்நிறைய
நன்மையிலை யோரிடத்து நாடு. என்றும் சொல்லினர்.

கண்ணப்பரும் சிறுத்தொண்டரும் கடவுளுக்குக் கரியமுது படைக்கவில்லையோ எனச்சிலகடையர்கள் கத்துகிறார்கள் அதைக்கவனிப்பாம்.

கண்ணப்பரும் சிறுத்தொண்டரும் கடவுளுக்குக் கரிய அமுது படைத்தது உண்மையே. கண்ணப்பர் கசிந்துருகிக்கண்ணைத் தோண்டியப்பி கண்ணப்பர் எனக்காரணப் பெயர் பெற்றார்.

சிறுத்தொண்டரும் தன் சிறு மகவைச் சித்ரவதைசெய்து சிவனுக்களித்துச் சிவகதி பெற்றார். அதைப்போல் இவர்களுக்கும் அன்பிருக்குமா? அவர்கள் திடபக்தியாலும் அன்பின் முதிர்ச்சியாலும் திரிகரணங்களும் ஒரு வழிச்சேரச் சிந்தை கரைந்து கடவுளிடத்தும் அவர் அடியார்களிடத்தும் செலுத்தும் மெய்யன்பே உருவாகி அவர்கள் தங்களை மறந்து இது செய்தால் பாபம் இது செய்தால் புண்ணியம் என்னும் தற்போதமற்றுச் செய்யும் செய்கை செயற்கரிய செய்கையே ஆதலின் அவர்கள் அன்பினால் செய்யும் செயலனைத்தும் அறம் என்று கூறவில்லையா.

அரனடிக்கன்பர் செய்பாபமுமறமதாகும்
பரனடிக்கன்பில்லாதார் புண்ணியம் பாபமாகும் என்றும்
அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கலன்பென்றும்
அவனுடைய அறிவெல்லா நமையறியுமறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினியவாமென்றும்
அவனுடைய நிலையில் வாறி நீயென்றநுள் செய்தார்.



கொன்றருந்தார் குற்றங்குணமே கொலைப்புலைஞர்
நன்றனைத்தும் தீயவையாகும், என்றமட்டும்,

என்றார் பெரியார். ஆகையால் அவர்களுக்கும் சாமான்ய மானிடர்களுக்கும் ஒப்பிடுதல் அணுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசமாகுமாகையால் அதைவிடுத்து மேலாராய்வாம்.

எங்கள் முன்னோர்கள் கையாண்டுவந்த பழக்கத்தை யொழித்துவிடுவதா எனக்கூறுவர் சிலர். முன்னோர்களைப் போலவே நீங்களும் ஒவ்வொன்றிலும் நடக்கப் பிரியப்படுவீர்களாகில் உங்கள் முன்னோர்கள் பரம ஏழைகளாகவோ, கூன் குருடு, செவிடு ஊமைகளாகவோ இருந்தால் நீங்களும் அப்படியாகிக்கொள்ளப்பட மாட்டீர்களல்லவா. அதுபோல முன்னோர்கள் தகாததைச் செய்துவந்தார்களானாலும் தகும் தகாதது தெரிந்த நீங்கள் தெரிந்தபின் தகாததைவிடவேண்டாமா, உதாரணமாக: இரணியன் சகலரையும் இரண்யாய நம எனச்சொல்லச்செய்து அரசு செய்ய அவன் மகன் அது கூடாது ஹரிநம எனச் சொல்லவேண்டும் எனவாதிட்டு முன்னோர் செய்ததை நீக்கி தகப்பனையும் குற்றத்திற்குள்ளாக்கி மேற்கதி யடைந்தானன்றோ.

தொன்மையவாமெனு மெவையு நன்றாகா இன்று
தோன்றியநூலெனுமெவையுந்தீதாகா. என்றார் பெரியார்.

அன்பர்களே இன்னும் சிலர் கொன்று தின்றால்தான் பாபமோ உலக்கை, உரல், அம்மி, அடுப்பு ஜலபாண்டம், துடைப்பம் முதலியவைகளால் பிரதிதினமும் எவ்வளவோ ஜீவன்கள் மாண்டு விடுகின்றன, அவைகள் ஆகாரத்திலும் சேர்ந்துவிடுகின்றன. அதனாற் பாபம் இல்லையோ எனக்கூறுவார் சிலர் பெரியோர்களே இதனாற் பாபம் உண்டென்பது உண்மையே ஆனால் அப்பாபங்கள் உடனுக்குடனே நீங்கிவிடுகின்றன. எப்படியெனில் பஞ்சயக்யம் செய்வதனால் நீங்கும்

அதாவது, (1) பிரயக்யம்: வேதஅத்தியயனம் செய்வது.

(2) பிதுர்யக்யம்: பிதுர்தேவதைகளுக்கு தர்பணம் செய்து திருப்தி செய்வது.

(3) தேவயக்யம்: அக்கினியில் ஓமம்செய்வது.

(4) பூதயக்யம்: ஜீவன்களுக்கு ஆகாரம் கொடுப்பது.

(5) மனுஷயக்யம்: அதிதிகளுக்கு போஜனம் அளிப்பது இப்படிப்பட்ட மகாயக்யத்தால் பிரதிதினமும் செய்யும் பஞ்சசூனு தோஷங்கள் நீங்கிவிடும் எனக்கூறுகிறது. கண்ட நீ பேஷணீ, சுல்லீ, உதகும்பீச, மார்ஜநீ, பஞ்சஸூனு க்ருகஹஸ்தஸ்ய தாபிஸ்வர்க்கம் நவிந்ததி என்ற தோஷங்கள், அப்போதைக்கப்போதே நிவர்த்தியாகிவிடுகிறது, ஆதலால் தோஷமில்லை. ஆகையால் எந்தச் சீவன்களையும் கொல்லாமலும், எந்தச் சீவன்களுக்கும் இம்சை செய்யாமலும் ஜீவகாருண்யச் செல்வர்களாகி நீடூழி வாழ்ந்து எம்பெருமான் திருவருளுக்குப் பாத்திரராகி பேரின்பப் பெருவாழ்வு வாழவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனடியை இறைஞ்சி இச்சடையை இத்துடன் முடிக்கின்றேன்.

இச்சபை எக்காலத்தும் நடை பெற்று சுதந்திரம் அடைய அருள் புரியுமாறு உங்களை அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

**ரிஷபன்,**
சபைத்தலைவர்.

சாரங்கத்தார் எழுந்து பெரியோர்களே இதுவரை இச்சபையை சீராக நடத்தி புத்தி போதித்த அவைத்தலைவர்களுக்கு உங்களின் சார்பாக பெரிய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இங்கு வந்து தங்கள் தங்கள் உபன்யாசங்களைச் செய்த பெரியோர்களுக்கும் சபையார் எல்லோருக்கும் என் மனபூர்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

**சாரங்கன்,**
வரவேற்புக் கமிட்டித்தலைவர்.

உடனே தலைவர்களால் பிரதி வந்தனமுமியற்றப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கடவுள் பூசையும் வாழ்த்தும் நடத்தப்பட்டு சபை இனிது கலைந்தது. சுபம்! சுபம்!!

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக வறக்களின்ப
நல்குக வுயிர் கட்கெலாம் நான்மறைச் சைவமோங்கி
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

**முற்றிற்று.**

220497

# வேளாள மித்திரன் சந்தா விவரம்.

---

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய யிடங்கட்கு வருடமொன்றுக்கு
ரூ. 2—0—0.

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா முதலிய யிடங்கட்கு
ரூ. 2—4—0.

வேளாள மித்திரன் தனி சஞ்சிகை அணா மூன்று.

1. நமது பத்திரிகை பிரதி பௌர்ணமைதோறும் வெளிவரும். பத்திரிகை வெளியான 15 தினங்களுக்குள், அது தங்கட்கு வந்து சேராவிட்டால் உடனே எங்கட்கு எழுதினால் நாங்கள் மீண்டும் அனுப்பக்கூடும். 15 தினங்கட்கு மேற்பட்டுவிட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்றணா தபால் பில்லை வாங்கி அனுப்பித்தான் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது சந்தாத்தொகையை முன்னதாக மணியார்டர் வாயிலாக அனுப்பிவிட்டால் இருபாலருக்கும் நலமாகிறது. V. P. யில் அனுப்புவதாயிருந்தால் உங்களுக்குத்தான் அதிகமாக மூன்றணா செலவாகிறது. சிங்கப்பூர், பினங் முதலிய இடங்கட்கு V. P. கிடையாது. அன்னோர் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் ஆர்டர் தாள்கள் வாங்கி அனுப்பியாவது சந்தாதாரராகவேண்டும்.

3. நீங்கள் கடிதம் எழுதும்போது உங்கள் சந்தா நம்பரை குறித்தனுப்பல்வேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளைக்கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| ஜீவியசந்தா | உள்நாடு | ... | ரூ. **25.** |
| | வெளிநாடு | ... | ரூ. **30.** |

விளம்பர விகிதம் ஒருதடைவைக்கு முழுப்பக்கம் ரூ. **20.**
அரைப்பக்கம் ரூ. **10.**

பாலசுப்ரமண்ய முதலியார்,
வேளாள மித்திரன் காரியாலயம்,
கோயமுத்தூர், (தென் இந்திய

### வேளாள மித்திரன் வந்தால்

இந்த மாதிரி பிரதியை நீங்கள் பார்த்து விட்டு ஏதோ தப்பித் தவரி நமக்கு அனுப்பிவிட்டார் என்று நீங்கள் எண்ணிவிடாதீர்கள் வேளாள சமூக அபிவிருத்தியின் பொருட்டே "வேளாள மித்திரன்" உங்களைத் தேடிக் கண்டுபிடித்துக்கொ[illegible]ளிடம் வருகிறான். அவன் கேட்பதெல்லாம் [illegible] இரண்டு ரூபாய் தான்.

# ஸ்ரீமத் இராமலிங்கஸ்வாமிகள் அருட்பா.

---

ஆணையுன்மே லாணையுன்மே லாணையுன்மே லையா
அரைக்கணமு நினைப்பிரிந்தே யினித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர் பேசக் கேட்டதுபோ லின்னுங்
குறும்பு மொழி செவிகளுறக் கொண்டிடவு மாட்டேன்
ஊணையுறக் கத்தையுநான் விடுகின்றே னீதா
னுவந்தவரா மெனிலென்ற னுயிரையும் விட்டிடுவேன்
மாணைமணிப் பொது நடஞ்செய் வள்ளால்நீ யெனது
மனமறிவா யினமுனக்கு வகுத்துரைப்ப தென்னே.

உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தா
லுயிர்விடுவேன் கணந்தரியே னுன்னாணை யிதுநீ
யென்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யா
னென்ன செய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே
னெந்தா—யன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினு
மகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
யின்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவே
லிதுதருண மருட்சோதி யெனக்குவந் தருளே

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த
வேழைபடும் பாடுனக்குந் திருவுளச் சம்மதமோ
விதுதகுமோ விதுமுறையோ விதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால் யானுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலையோ
கோழையுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருணின் னருளொளியைக் கொடுத்தருளிப்
பொழுதே.

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே
யுகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவி
லாடுகின்ற வரசேயென் னலங்க லணிந்தருளே.